TAMIL NADU LEGISLATURE LIBRARY
6 NOV 1972
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1972 ஆகஸ்ட் 19.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மதுரைக்கு சிறுவர் திரை அரங்கம்.

*176. வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் சிறுவர் திரை அரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆம்.

திரு. பி. எஸ். மணியன்: இந்தத் திரையரங்கத்தின் நோக்கம் என்ன ? எந்தெந்த வகையில் பயன்படுத்தப்பட இருக்கிறது ? இந்தத் திட்டத்தை எல்லா மாவட்டத் தலைநகரங்களுக்கும் விரிவுபடுத்தி, சிறுவர் திரையரங்கத்தை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தத் திரையரங்கத்தின் நோக்கம், சிறுவர்கள் நல்ல அறிவார்ந்த படங்களைப் பார்த்து அதன் மூலமாகப் பொது அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான். அப்படிப்பட்ட படங்கள் வராத நேரத்தில் பொதுவான பல நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள் போன்றவை நடப்பதற்கு இது தரப்பட்டு, அதன் மூலமாகக் கிடைக்கின்ற வருமானத்தின்மூலம் இந்த அரங்கங்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலை நகரத்திலும் இந்த அரங்கம் அமைப்பதற்கு இட வசதி, நிலம்

கிடைக்கும் தன்மை இவைகளையெல்லாம் ஆராய்ந்து அறிவிக்குமாறு ஆங்காங்குள்ள மக்கள் தொடர்பு அதிகாரிகளுக்குக் கூறப்பட்டிருக்கிறது.

திரு. நா. வெ. குருசாமி: முதலமைச்சர் அவர்கள் கூறும்போது மதுரையில் சிறுவர் திரையரங்கம் ஏற்படுத்தப்போவதாகக் கூறினார்கள். அது எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது அது பற்றி ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. இ. எஸ். தியாகராஜன்: சென்னையிலுள்ள கலைவாணா அரங்கைப் புதுப்பிப்பதற்கு மதிப்பீடு எவ்வளவு? வேலை எப்பொழுது முடிவுறும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதனுடைய மதிப்பீடு குறித்து தனிக் கேள்வி போட்டால் சொல்ல முடியும். ஆனால், இன்னும் ஐந்தாறு மாதங்களில் அதனுடைய வேலை முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையிலுள்ள குடிசைப் பகுதிகள்

*177 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1,202 குடிசைப்பகுதிகள் தற்போது சென்னை நகரத்தில் உள்ளன.

திரு. என். கிட்டப்பா: கழக ஆட்சி பொறுப்பேற்றுக்கொள்வதற்கு முன்னால் இருந்த குடிசைப் பகுதிகள் எத்தனை மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன? அவைகளுக்கான செலவினங்களை அறிவிக்க இயலுமா? அதற்காக மத்திய அரசு ஏதேனும் நிதி உதவி அளித்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1,202 குடிசைப் பகுதிகள் குடிசை மாற்று வாரியத்தின்கீழ் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது 1,041 குடிசைப் பகுதிகளில் கணக்கெடுக்கும் வேலையெல்லாம் முடிவுற்றிருக்கின்றன. ஏழு, எட்டு ஆண்டுகளில்